# இடைத் தேர்தல் நவம்பர் 30, 2023
## Councillor Ward 20, ஸ்காபோரோ தென்மேற்கு

By-Election
VOTE
November 30

## தபால் மூலமான வாக்களிப்புக்கு விண்ணப்பியுங்கள்

தபால் மூலம் வாக்களிப்பதற்கு, உங்களின் விண்ணப்பத்தை ஒக்ரோபர் 23ம் திகதிக்கும் நவம்பர் 10ம் திகதிக்கும் இடையில் www.toronto.ca/VoteByMail இல் சமர்ப்பியுங்கள்.

## வாக்காளர் பட்டியலைச் சரிபாருங்கள்

ஒக்ரோபர் 23 முதல் www.toronto.ca/MyVote இல் வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்களா என்பதைச் சரிபார்ப்பதுடன், வாக்களிக்க வேண்டிய இடத்தையும், கவுன்சிலருக்கு போட்டியிடும் வேட்பாளர்களையும் கண்டறியுங்கள்.

# முக்கியமான திகதிகள்

## ஒக்ரோபர் 23

- **தபால் மூலமான வாக்களித்தலுக்கு** விண்ணப்பிப்பதற்கான முதல் நாள்
- **வாக்காளர் பட்டியலில்** உங்களின் தகவல்களைச் சேர்ப்பதற்கான, மாற்றுவதற்கான அல்லது இற்றைப்படுத்துவதற்கான முதலாவது நாள்
- **Proxy (வாக்களிக்கும் பிரதிநிதிக்கான) படிவம்** ஒன்றைக் கோருவதற்கும், VoterRegistration@toronto.caக்கு மின்னஞ்சலிடுவதன் மூலம் அதை அங்கீகரிப்பதற்கான சந்திப்பொன்றை ஒழுங்குசெய்வதற்குமான முதல் நாள். தகவல்களுக்கு 311ஐ அழையுங்கள்.

## நவம்பர் 10

- **தபால் மூலமான வாக்களித்தலுக்கு** விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு மாலை 4:30.
- www.toronto.ca/MyVote, இல் உள்ள **வாக்காளர் பட்டியலில்** உங்களின் தகவல்களைச் சேர்ப்பதற்கான, மாற்றுவதற்கான அல்லது இற்றைப்படுத்துவதற்கான காலக்கெடு மாலை 4:30.

## நவம்பர் 14

- வாக்களிப்பதற்குத் தகுதியுள்ளவர்களுக்கு **வாக்காளர் தகவல் அட்டைகள் (VICகள்)** தபாலில் அனுப்பப்படுகின்றன.
- வாக்காளர் பட்டியலில் இருக்கும் வாக்களிப்பதற்குத் தகுதியுள்ளவர்களுக்கு மட்டும், நவம்பர் 10 முதல் VIC அட்டை ஒன்று தபாலில் அனுப்பிவைக்கப்படும். வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்கள், ஆனால் உங்களுக்கு VIC கிடைக்கவில்லை என்றால், உங்களின் அட்டையை www.toronto.ca/MyVote இல் பெற்றுக்கொள்ளுங்கள். வாக்களிப்பதற்கு உங்களுக்கு VIC அட்டை தேவைப்படாது.

## நவம்பர் 25 மற்றும் 26

- **முன்கூட்டிய வாக்களிப்புக்கான** இரண்டு நாள்கள், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை.
- **முன்கூட்டிய வாக்களிப்புக்கான அமைவிடங்கள்**: Birchmount Community Centre மற்றும் Warden Hilltop Community Centre.

## நவம்பர் 27

- பூர்த்திசெய்யப்பட்ட **தபால் மூலமான வாக்களித்தல்** பொதிகள் நண்பகலுக்குள் (பி.ப. 12) கிடைக்கவேண்டும்.

## நவம்பர் 30, வியாழக்கிழமை

- **தேர்தல் நாள்** காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை.
- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிக்கும் இடத்தில் வாக்களியுங்கள். எங்கு வாக்களிக்க வேண்டும் என்பதை www.toronto.ca/MyVote இல் கண்டறியுங்கள்.

# வாக்களிப்பதற்கான தெரிவுகள்

## நேரில்

பின்வரும் ஏதாவதொரு வாக்களிப்பு நாளில் நேரில் வாக்களியுங்கள்:

- முன்கூட்டிய வாக்களிப்பு நாள்களான, நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய வார இறுதி நாள்களில், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை முன்கூட்டியே வாக்களியுங்கள். Birchmount Community Centre, 93 Birchmount Road இல் **அல்லது** Warden Hilltop Community Centre, 25 Mendelssohn Street இல் வாக்களியுங்கள்.
- தேர்தல் நாளான நவம்பர் 30 அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை வாக்களியுங்கள். தேர்தல் நாளன்று, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிக்கும் இடத்திலே நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

முன்கூட்டிய வாக்களிப்புக்கான மற்றும் தேர்தல் நாளன்று வாக்களிப்பதற்கான அமைவிடங்களின் விபரங்களை www.toronto.ca/MyVote இல் அல்லது உங்களின் வாக்காளர் தகவல் அட்டையில் கண்டறியுங்கள்.

## தபால் மூலம்

தபால் மூலம் வாக்களிப்பதற்குக் கீழேயுள்ள படிமுறைகளைப் பின்பற்றுங்கள், அத்துடன் ஒக்ரோபர் 23க்கு முதல் விண்ணப்பியுங்கள்.

**படிமுறை 1: இணையத்தில் விண்ணப்பித்தல்**

விண்ணப்பிப்பதற்கு, ஒக்ரோபர் 23 முதல் நவம்பர் 10 மாலை 4.30வரை www.toronto.ca/VoteByMail க்குச் செல்லுங்கள்

**படிமுறை 2: உங்களின் பொதியைப் பூர்த்திசெய்தல்**

உங்களின் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டவுடன், பூர்த்திசெய்யப்படுவதற்காகத் தபால் மூலமான வாக்களிப்புக்குரிய பொதி உங்களுக்கு நவம்பர் 2 முதல் அனுப்பிவைக்கப்படும்.

- உறுதிசெய்தல் படிவத்தில் கையொப்பமிடுங்கள்
- வாக்குச்சீட்டில் அடையாளமிடுங்கள்
- பத்திரப்படுத்தப்பட்ட ரகசிய தபாலுறையை (Secrecy Envelope) திருப்பியனுப்பும் மஞ்சள் நிறத் தபாலுறைக்குள் (Return Envelope) செருகுங்கள்

**படிமுறை 3: உங்களின் பொதியைத் தபாலில் அனுப்புதல்**

- **நவம்பர் 27 அன்று நண்பகலுக்குள் (12 மணி)** பூர்த்திசெய்யப்பட்ட பொதிகள் **கிடைக்கவேண்டும்**
- பூர்த்திசெய்யப்பட்ட உங்களின் பொதியை Canada Post தபால்பெட்டி ஒன்றுக்கு எடுத்துச் செல்லுங்கள் அல்லது மஞ்சள் நிற ரொறன்ரோ தேர்தல்கள் (Toronto Elections) பெட்டி ஒன்றினுள் போட்டுவிடுங்கள்.
- நீங்கள் போட்டுவிட்டுச் செல்லக்கூடிய இரண்டு மஞ்சள் பெட்டிகள் நவம்பர் 20ம் திகதி முதல் இருக்கும். போட்டுவிட்டுச் செல்லக்கூடிய பெட்டிகளின் அமைவிடங்கள்:

  Birchmount Community Centre, 93 Birchmount Road

  **அல்லது**

  Warden Hilltop Community Centre, 25 Mendelssohn Street

TORONTO

இணையச் செயல்முறை பற்றிய கேள்விகளுக்கு, தொலைபேசி மூலம் விண்ணப்பிப்பது, அல்லது அணுகல் தொடர்பான தகவல்களுக்கு, elections@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் அல்லது 311ஐ அழையுங்கள். மேலும் அறியுங்கள்: www.toronto.ca/VoteByMail.

## Proxy மூலம் வாக்களித்தல்

நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வாக்களிப்பதற்கு உங்களால் முடியாவிட்டால், வாக்களிக்கும் பிரதிநிதி (Proxy) ஒருவரை நீங்கள் நியமிக்கலாம். வாக்களிக்கும் பிரதிநிதி என்பவர் உங்களின் சார்பாக வாக்களிக்கக்கூடியவர் என நீங்கள் நம்பும் மற்றும் வாக்களிக்கத் தகுதியான ஒருவராவார். பதில் வாக்காளர் நியமனப் (Voting Proxy Appointment) படிவமொன்றைப் பூர்த்திசெய்து, நீங்களும் உங்களின் வாக்களிப்புப் பிரதிநிதியும் அதில் கையொப்பமிடுவதுடன், நவம்பர் 30 ஆம் திகதி மாலை 4:30 மணிக்கு முன்பாக நகரசபை எழுத்தரின் (City Clerk) உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுங்கள்

Proxy படிவமொன்றைப் பெறுவதற்கும், அதனை உறுதிப்படுத்தப்படுவதற்கான ஒரு சந்திப்பை ஒழுங்குசெய்வதற்கும் ஒக்ரோபர் 23 முதல் VoterRegistration@toronto.ca க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

மேலும் அறிவதற்கு 311ஐ அழையுங்கள், அல்லது www.toronto.ca/ByElection ஐப் பார்வையிடுங்கள்.

# யார் வாக்களிக்கலாம்

Councillor Ward 20, ஸ்காபோரோ தென்மேற்குக் கவுன்சிலருக்கான 2023 இடைத் தேர்தலில், வாக்களிப்பதற்கு பின்வருவன உங்களுக்குப் பொருந்தவேண்டும்:

- ஒரு கனேடியப் பிரஜை; மற்றும்
- குறைந்தது 18 வயது; மற்றும்
- Ward 20, ஸ்காபோரோ தென்மேற்கில் வசிப்பவர்; அல்லது
- ரொறன்ரோவில் நீங்கள் வசிக்காவிடினும், Ward 20, ஸ்காபோரோ தென்மேற்கில் நீங்கள் அல்லது உங்களின் துணைவர் சொந்தமாகச் சொத்து வைத்திருக்கிறீர்கள் அல்லது சொத்து ஒன்றை வாடகைக்கு வைத்திருக்கிறீர்கள்; மற்றும்
- சட்டம் எதுவும் நீங்கள் வாக்களிப்பதைத் தடைசெய்ய இல்லை.

Ward 20இல் உங்களுக்குச் சொந்தமான அல்லது நீங்கள் வாடகைக்கு செலுத்தும் சொத்துக்கள் எத்தனை இருந்தாலும் ஒருமுறை மட்டுமே நீங்கள் வாக்களிக்க முடியும்.

## பாடசாலை காரணமாக ரொறன்ரோவுக்கு அப்பால் வாழும் மாணவர்கள்

Ward 20, ஸ்காபோரோ தென்மேற்கில் உள்ள ரொறன்ரோ குடியிருப்பாளராக நீங்கள் இருக்கிறீர்கள், ஆனால் ஒன்ராறியோவின் இன்னொரு நகராட்சியில் படித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றாலும், இந்த இடைத்தேர்தலில் வாக்களிப்பதற்கு உங்களுக்குத் தகுதியிருக்கும்.

மேலும் அறியுங்கள்: www.toronto.ca/elections/voters.

TORONTO

# வாக்காளர் பட்டியலில் இணையுங்கள்

ஒக்ரோபர் 23 முதல், வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்கள் சரியாக உள்ளனவா என்பதை, குறிப்பாக நீங்கள் அண்மையில் இடம்மாற்றியிருந்தால் அல்லது உங்களின் பெயரை மாற்றியிருந்தால் உறுதிப்படுத்துவது முக்கியமாகும். நவம்பர் 10 அளவில் வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருந்தால், வாக்காளர் தகவல் அட்டை உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம், நவம்பர் 10, மாலை 4:30 வரை வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்களை உறுதிபடுத்துங்கள், சேருங்கள் அல்லது இற்றைப்படுத்துங்கள்:

- toronto.ca/MyVote ஐப் பார்வையிடுதல்:
- VoterRegistration@toronto.ca க்குமின்னஞ்சல் அனுப்புதல்
- 311ஐ அழைத்தல்

நவம்பர் 10 காலக்கெடுவை நீங்கள் தவறவிட்டிருந்தால், முன்கூட்டிய வாக்களிப்பின்போது (நவம்பர் 25 மற்றும் 26) அல்லது தேர்தல் நாளன்று (நவம்பர் 30) நீங்கள் நேரில் வாக்களிக்கச் செல்லும்போதும் வாக்காளர் பட்டியலில் உங்களைச் சேர்க்க முடியும்.**வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருந்தாலும்கூட, வாக்களிக்கச் செல்லும்போது அடையாள அட்டை ஒன்றை நீங்கள் கொண்டுவர வேண்டும்.**

## MyVote

Ward 20 ஸ்காபோரோ தென்மேற்கு கவுன்சிலருக்கான 2023 இடைத்தேர்தலுக்கு நீங்கள் ஆயத்தம் செய்வதற்கான யாவும் MyVote வலைப் பயன்பாட்டில் உள்ளன.

பின்வருவனவற்றைச் செய்வதற்கு ஒக்ரோபர் 23 முதல் www.toronto.ca/MyVote க்குச் செல்லுங்கள்:

- வாக்காளர் பட்டியலில் நீங்கள் உள்ளீர்களா என்பதைக் கண்டறிவதற்கு
- உங்களின் வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்களைச் சேர்ப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது இற்றைப்படுத்துவதற்கு (**நவம்பர் 10 வரை**)
- கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்ப்பதற்கு
- எங்கே, எப்போது வாக்களிக்க வேண்டும் என்பதைக் கண்டறிவதற்கு
- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்துக்கான அணுகல்தன்மை தொடர்பான தகவல்களைக் கண்டறிவதற்கு)
- உங்களின் வாக்குச்சீட்டின் மாதிரி ஒன்றைப் பார்ப்பதற்கு
- உங்களின் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்ப்பதற்கு, பதிவிறக்குவதற்கு அல்லது அச்சிலெடுப்பதற்கு (**நவம்பர் 14 முதல்**)

வாக்களிக்கும் இடங்கள் மாறக்கூடும் என்பதால், நேரில் வாக்களிப்பதற்காக நீங்கள் செல்வதற்கு முன் MyVote ஐத் தொடர்ந்து சரிபாருங்கள்.

# வாக்காளர் தகவல் அட்டை

**வாக்காளர் தகவல் அட்டைகள் (VICகள்) நவம்பர் 14முதல் தபாலில் அனுப்பப்படுகின்றன**. உங்களின் VICஐ வாக்களிக்கும் இடத்திற்கு எடுத்துச்

செல்வது, வாக்களிக்கும் இடத்தில் நீங்கள் செலவழிக்கும் நேரத்தைக் குறைப்பதற்கும் உதவலாம். உங்களின் VICஐ அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியாது

உங்களின் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்ப்பதற்கு www.toronto.ca/MyVote க்குச் செல்லுங்கள், நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது அதை உங்கள் smart phoneஇல் காட்டுங்கள்.

- வாக்காளர் பட்டியலில் நவம்பர் 10 அளவில் நீங்கள் இருக்கிறீர்கள், இருந்தும் உங்களின் VIC உங்களுக்குக் கிடைக்கவில்லை, ஆனால் உங்களின் வீட்டிலுள்ள ஒருவருக்கு அது கிடைத்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் Canada Post அட்டைகளைத் தொகுதி தொகுதியாக அனுப்புவதாக இருக்கலாம்.
- ஒன்றுக்கு மேற்பட்ட VIC உங்களுக்குக் கிடைத்திருந்தால், உங்களின் அடையாளத்துடன் பொருந்தக்கூடிய மிகவும் துல்லியமான தகவல்களைக் கொண்ட அட்டையை நீங்கள் வாக்களிக்க வரும்போது வாக்களிக்கும் இடத்திற்கு கொண்டு வாருங்கள்
- உங்களுக்குக் கிடைத்த VICஇல், தகவல்கள் தவறாக இருந்தால், வாக்களிப்பதற்காக நீங்கள் செல்லும்போது உங்களுடன் அந்த அட்டையை எடுத்துச்சென்று வாக்காளர் பட்டியல் திருத்தமொன்றுக்கான (Voter List Amendmen) விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யும்படி கேட்கலாம்.
- உங்களின் வீட்டில் வசிக்காத ஒரு நபரின் VIC உங்களுக்குக் கிடைத்தால், **அனுப்பியவருக்குத் திருப்பியனுப்புக (Return to Sender)** என்பதை அந்த அட்டையில் எழுதி Canada Post தபால் பெட்டி எதிலாவது போட்டுவிடலாம்.
- வாக்களிப்பதற்கு உங்களுக்கு VIC தேவையில்லை. www.toronto.ca/VIC இல் VIC பற்றி மேலும் அறியுங்கள்.

# ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைகள்

வாக்களிக்கச் செல்லும்போது அடையாள அட்டை (ID) ஒன்று தேவைப்படும். உங்களின் பெயர் மற்றும் Ward 20, ஸ்காபோரோ தென்மேற்கு முகவரியைக் காட்டும் ID ஒன்றைக் கொண்டுவருவதை நினைவில் வைத்திருங்கள். உங்களிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ID எதுவுமில்லை, அத்துடன் வாக்காளர் பட்டியலிலும் நீங்கள் இல்லையென்றால், உங்களின் ID ஒன்றுடன் வாக்குச் சீட்டைப் பெறுவதற்குத் திரும்பவும் வரும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

## ஏற்றுக்கொள்ளக்கூடிய IDக்கான உதாரணங்கள்:

- ஒன்ராறியோ ஓட்டுநர் உரிமம் அல்லது மோட்டார் வாகன அனுமதி (வாகனம் பற்றிய பகுதி)
- இரத்துச் செய்யப்பட்ட தனிப்பட்ட காசோலை (cheque), கடன் அட்டை (credit card) அல்லது வங்கிக் கணக்கு அறிக்கை
- மின்சக்திக்கான, தொலைபேசிக்கான அல்லது cable தொலைக்காட்சிக்கான, தண்ணீருக்கான, எரிவாயுக்கான பயன்பாட்டுக் கட்டணச்சீட்டு.அல்லது பொதுப் பயன்பாட்டு ஆணையமொன்றின் கட்டணச்சீட்டு
- வேலைவழங்குநரால் வழங்கப்பட்ட cheque stub, T4 statement அல்லது pay receipt

- Ontario Works அல்லது Ontario Disability Support Program இன் நேரடி வைப்பு அறிக்கை
- சொத்து வரி மதிப்பீடு, வருமான வரி மதிப்பீட்டு அறிவிப்பு, பிள்ளைகளுக்கான ஆதாரத் தொகை (Child Tax) அறிக்கை.
- அடமான அறிக்கை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைகளின் முழுமையான பட்டியலை www.toronto.ca/elections/Voters இல் கண்டறியுங்கள்.

# அணுகல் தொடர்பான தகவல்கள்

வாக்களிப்பு இடங்கள் யாவும் நீங்கள் அணுகக்கூடியவையாக இருக்கும். நுழைவுப் புள்ளி, சாய்வுதளங்கள் (ramps), தானாகத் திறக்கும் கதவுகள் அல்லது வாக்காளருக்கு உதவி வழங்கும் அமைப்புகள் (VATகள்) பற்றிய தகவல்களை www.toronto.ca/MyVote இல் அல்லது www.toronto.ca/ByElection இல் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். வாக்களிப்பதில் ஏதாவது தடையை நீங்கள் எதிர்கொண்டால், elections@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் அல்லது 311 என்ற இலக்கத்தை அழைப்பதன் மூலம் Toronto Elections ஐத் தொடர்புகொள்ளுங்கள்.

## வாக்களிப்பதற்கான அணுகலுக்கான உபகரணங்கள்(VAT)

VAT என்பது, வலுவிழப்பைக் கொண்ட வாக்காளர்கள் அவர்களின் வாக்குச்சீட்டில் ரகசியமாகவும், சுயாதீனமாகவும் அடையாளமிட உதவும் வாக்குச்சீட்டுக் குறியிடும் ஒரு சாதனமாகும். தொடுதிரை, ஒலிமூலமான செயல்பாடு, braille key pad, sip/puff tube device, rocker paddle/foot switch மற்றும் எழுத்துரு அளவுகள் மற்றும் நிறங்களின் வித்தியாசத்தைச் சரிசெய்வதற்கான உருப்பெருக்கும் அம்சங்கள் ஆகியவற்றை இந்த அமைப்புகள் உள்ளடக்குகின்றன.

முன்கூட்டிய வாக்களிக்கும் இடங்கள் அனைத்திலும் வாக்காளர் உதவி செய்யும் அமைப்புகள் உள்ளன. தேர்தல் நாளன்று வாக்காளருக்கு உதவிசெய்யும் அமைப்பைப் பயன்படுத்த வேண்டியதேவை உங்களுக்கு உள்ளது, ஆனால் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் அப்படி ஒன்று இல்லை என்றால், உங்களின் வாக்களிப்பு இடத்தை மாற்றுவதை எப்படிக் கோருவது என்பதை அறிவதற்கு 311ஐ அழையுங்கள். VAT அமைவிடங்கள் பற்றிய விபரங்கள் www.toronto.ca/MyVote இல் My Voting Places இன் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

## ஏனைய சேவைகள்

கிடைக்கக்கூடியதாக இருக்கும் சேவைகள் அனைத்தையும் பற்றி மேலும் அறிவதற்கு 311 ஐ அழையுங்கள் அல்லது www.toronto.ca/AccessibleElections ஐப் பார்வையிடுங்கள்.

- நேரில் உங்களால் வாக்களிக்க முடியாவிட்டால், www.toronto.ca/VoteByMailஇல் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பியுங்கள்.
- நேரிலோ அல்லது தபால் மூலமோ உங்களால் வாக்களிக்க முடியாவிட்டால், உங்களின் சார்பில் வாக்களிப்பதற்கு வாக்களிக்கும் பிரதிநிதி ஒருவரை நீங்கள் நியமிக்கலாம்.
- உங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் ஏதாவது தடையை நீங்கள் எதிர்கொண்டால், வாக்களிப்பு இடத்தை மாற்றும்படி கோருங்கள்.

- வாக்களிக்கும் இடத்துக்குள் செல்வதற்கு உடல்ரீதியாக உங்களால் முடியவில்லை என்றால், உங்களின் வாகனத்துக்கு அல்லது வாக்களிக்கும் இடத்திலுள்ள இன்னொரு பகுதிக்கு உங்களின் வாக்குச்சீட்டைக் கொண்டுவருமாறு கேளுங்கள்.
- வாக்குச் சீட்டில் உங்களால் குறியிட உதவுவதற்காக உங்களின் நண்பர் ஒருவரை நீங்கள் அழைத்துவாருங்கள் அல்லது உதவிசெய்யும்படி தேர்தல் உத்தியோகத்தர் ஒருவரிடம் கேளுங்கள்.
- ஆதரவுவழங்கும் நபர்கள் மற்றும் சேவைசெய்யும் விலங்குகளின் பயன்பாட்டை அனைத்து வாக்களிக்கும் இடங்களும் வரவேற்கின்றன.
- பார்வைத்திறன் குறைவான வாக்காளர்களுக்கு உதவுவதற்காக அனைத்து வாக்களிக்கும் இடங்களிலும் உருப்பெருக்கப்பட்ட தாள்கள் மற்றும் வாக்களிப்பது எப்படி என்பதற்கான அறிவுறுத்தல்கள் braille இல் கிடைக்கும்.
- செவிப்புலனற்றோருக்கான (TTY) இணைப்பை 416-338-OTTY (0889)இல் அழைப்பதன் மூலம் கேட்டல்திறன் அற்ற அல்லது கேட்டல் திறன் குறைந்தவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சமூக ஊடகம், வலைத்தளம் மற்றும் மின்னஞ்சல்

**Twitter:** @cityoftoronto

**Facebook:** City of Toronto

**Instagram:** @cityofto

**Website:** www.toronto.ca/ByElection

**Email:** elections@toronto.ca

# மொழிபெயர்ப்புப் பற்றிய தகவல்கள்

வேறொரு மொழியில் உங்களுக்குத் தகவல்கள் தேவைப்பட்டால் 311ஐ அழையுங்கள் அல்லது www.toronto.ca/elections/voters ஐப் பார்வையிடுங்கள். வாக்களிப்பது எப்படி என்பது பற்றிய அறிவுறுத்தல்கள் வாக்களிக்கும் இடங்கள் யாவற்றிலும் 26 மொழிகளில் கிடைக்கும்.

TORONTO